## 2018 மார்கழி மாதத்திற்கான இறைவேண்டல் மற்றும் நடுநிலை செபத்திற்கான கைக்கொடுத்தல்

*"எழு ஒளிவீசு உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது."* *(எசாயா 60:1)*

திருவருகை காலம் அல்லது நத்தார் காலம் உதயமாகி உள்ளது. நத்தாரின் உண்மையான அர்த்தம் இயேசு ஆண்டவரின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுவதாகும். இன்று அநேகமாக, கிறிஸ்தவர்கள் நத்தாரை வெளிப்படையாகவும், உணவு வகைகள் குடி பானங்கள், ஆடை அலங்காரத்திற்குமே முக்கியத்துவம் கொடுத்து விழாவாக கொண்டாடுவது கவலைக்குரிய விடயமாகும்.

ஆனாலும் பெத்லகேமில் அன்று மாட்டு தொழுவத்தில் பிறந்த இயேசு ஆண்டவர் முழு மனித இனத்தின் பாவத்தின் விளைவையும் தோளில் சுமந்தவாறு சிலுவையில் அறை

ஸஜாயுண்டு மரணத்தின்று உயிர்த்து விண்ணேற்றமடைந்து இரண்டாம் முறையாக வெற்றியோடு வருவதாக வாக்குறுதி கொடுத்தாலும், இன்றும் அவர் எம்மத்தியில் வெளிப்படுகின்றார். விசேடமாக திருப்பலியில் திவ்விய நற்கருணைநாதரினுள் மனுவுருவாகி எமக்கு உணவாகுவதும், அதேபோல் எமது ஒற்றுமையினுள், நிகழ்ச்சியினுள் அவரை எம்மால் அனுபவிக்க முடியும்.

நிரந்தரமும் கிறிஸ்துநாதரை சந்தித்தல், உறவாடுதல், அனுபவித்தல் உண்மையான நத்தாராகும். வேண்டுதல் ஊழியர்கள் என்ற வகையில் திருவருகை காலம் முழுவதும் அனைத்து கிறிஸ்தவ மக்களும் நிரந்தரமும் இயேசு ஆண்டவரினுள் வாழ்கின்ற, அவரை அனுபவிக்கின்ற உண்மையாக நத்தாரினுள் தமது குடும்பத்தில். ஊரில். முழு நாட்டிலும் உயிருள்ள ஆண்டவரை தமது வாழ்வின் சாட்சியாக வெளிப்படுத்த தேவையான தூய ஆவியானவரின் வல்லமை கிடைக்குமாறு நடுநிலைவகித்து செபிப்போம்.

இம்மாதம் நற்செய்தி வழியாக நாம் 'எழு ஒளிவீசு உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது.' என்ற வார்த்தை யதார்த்தம் ஆகும்படியாக இலங்கை தேசத்திற்காக செபிப்போம்.

**"நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை கிறிஸ்து இயேசுவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்து வைத்தார்"** (எபேசியர் 1:4-6)

**முதலாம் வாரம்:- தியான வாசிப்பு எசாயா 61:1-3**
வேண்டுதலுக்கான விசேட நோக்கு

திருவருகை காலத்தினுள் அனைத்து கிறிஸ்தவ மக்களும் பச்சாதாபத்துடன் மனம்வருந்தி நத்தாரை அர்த்தமுள்ளதாக கொண்டாடுவதற்கு தேவையான தூய ஆவியானவருடைய வல்லமை கிடைக்கமாறு செபிப்போம். (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- சுவாமிஅப்பாவுக்காக
- இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, சுசுமத குழு உள்ளிட்ட புபுதுவையில் பொறுப்பாளர்களாக பணியாற்றும் அனைவருக்காகவும்.
- மார்கழி மாதம் 02ம் திகதி நடைபெறும் சங்கம குடும்ப தினத்திற்காக
- அரசியல் பகுதியில் தோன்றியிருக்கும் நெருக்கடியினுள் மக்களுக்கு நன்மையான சூழல் உதயமாகும் முகமாக.
- மார்கழி 8-9 தினங்களில் தம்பரவில, வென்னப்புவ சங்கமங்களுக்காக நடைபெறுகின்ற செப பாசரைக்கு பங்கு கொள்பவர்களுக்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்.
- ஏனைய வேண்டுதல்கள்………

**இரண்டாம் வாரம்:- தியானவாசிப்பு பாரூக் 5:1-9**
வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-

நாட்டினுள் நிலவுகின்ற கருத்து வேறுபாடுகள் அகலவும் எமது நாட்டினுள் உண்மையான … ஏற்படும் முகமாக (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- ஜனாதிபதி உட்பட அரசியல் வாதிகளுக்காக
- பரிசுத்த திருத்தந்தை உட்பட ஆயர்கள், குருக்கள் துறவர மற்றும் மறை பாடசாலை ஆசிரியர் ஆசிரியர்களுக்காக
- போதை பொருள் போதைவஸ்து உட்பட பலவிதமான … உள்ளாகி இருப்பவர்களுக்காகவும் அவர்களது குடும்பங்களுக்காகவும். அதே போல் அவை தொடர்பான வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்காகவும் அவர்கள் செய்யும் செயலின் பாரதூரமான நிலையை உணர்வதற்கு தேவையான ஞானம் கிடைக்கும் முகமாக
- வெளிநாட்டு புபுது சங்கங்களுக்காகவும் அங்கு பொறுப்பு வகிப்பவர்களுக்காகவும்……
- வேண்டுதல் குழுவில் பங்குக் கொள்ளும் அனைவருக்காகவும் வேண்டுதல் துணையாளர் குழுவிற்காகவும்.
- ஏனைய வேண்டுதல்கள்…..

**மூன்றாம் வாரம்:- தியானவாசிப்பு பிலிப்பியர் 4:4-7**
வேண்டுலுக்கான விசேட நோக்கு:-

ஸ்ரீ பிரசங்சாரமயில் புதிதாக கட்டப்படுகின்ற செப அரங்கத்தின் மேடையை முடிவு செய்வதற்கு தேவையான பொருளாதார வசதிகள் கிடைக்கும் முகமாக (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- தூர பிரதேசங்களில் இருக்கின்ற புபுதுவ சங்ககளுக்காக
- புபுதுவயில் எளிமை திருமணங்கள், வெள்ளி மோதிர திருமணங்களுக்கு உள்ளாகிய அனைத்து தம்பதியினருக்காகவும் குடும்பங்களுக்காகவும்
- குடும்பகளில் திருச்செபமாலைக்கும், குடும்ப செபத்திற்கும் முதலிடம் கொடுக்கும் முகமாக.
- ஆரம்ப காலத்தில் வியாழக்கிழமைகளில் புபுதுவ குடும்பங்களில் குடும்ப பலியை முதலிடமாக கருதியதால் மீண்டும் வியாழக்கிழமைகளில் புபுதுவ இல்லங்களில் குடும்ப பலிக்கான கதவு திறக்கும் படியாக.

- ஏனைய வேண்டுதல்கள்……….

**நான்காம் வாரம் :- தியான வாசிப்பு–எசாயா 9:2-7**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :- திருச்சபைக்காக (20 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- வயோதிப இல்லங்களில், அநாதை இல்லங்களில், சிறைச்சாலைகளில், புனரமைப்பு நிலையங்களில், மனநோய் வைத்தியசாலையில் இருக்கின்ற அனைவருக்காகவும், தெருக்களில் உதவி கேட்கும் வறியவர்களுக்காகவும், ஊனமுற்ற, குருடர்கள், அனைவருக்காகவும்.
- பிரசங்காராமையில் திவ்வியநற்கருணைநாதரின் முன்னிலையில் தொடர் செபத்தில் பங்குக் கொள்ளும் குழுவிற்காக.
- பிரசங்காராமையில் புபுது காரியாலயத்தில், புபுது அச்சகத்தில் மறை பரப்புதல் சேவையில், தூய ஆவியில் பயணம் சஞ்சிகைக்கு கடிதம் எழுதும் மற்றும் பணிபுரியும் அனைவருக்காகவும், தூய ஆவியில் பயணம் சஞ்சிகையை பகிர்ந்தளிக்கும் அனைவருக்காகவும்.
- ஏனைய வேண்டுதல்கள்……….

**அல்லேலூயா அல்லேலூயா !**
**அதி உன்னத இறைவனுக்கு மகிமையும்**
**மனுலகில் இறை வரப்பிரசாதம் பெற்ற மக்களுக்கு அமைதியும் உண்டாகுக !**
**அல்லேலூயா**

இறைவேண்டல் மற்றும் நடுநிலை சேவை